

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 35 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 28 – வெள்ளிக்கிழமை 13 செப்டம்பர் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 35: Thiruvalluvar Year - 2055 - Aavani 28 - Friday 13 September 2024 - Dak 12 Pages ₹ 5.00


### திருவள்ளூர் - கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கட்டுமானக் கருவிகள் உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்த

# ‘கேட்டர்பில்லர்’ நிறுவனம் ரூ.500 கோடி முதலீடு!

## சிகாகோவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்!

**சிகாகோ, செப். 13 -**

**அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் - கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் ரூ.500 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 11.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், கேட்டர்பில்லர் நிறுவனத்து டன் 500 கோடி ரூபாய் முதலீட்டில், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அந்நிறுவனத்தின் தற்போதுள்ள கட்டுமான கருவிகள் உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**உயர்கல்விச் சேர்க்கை விகிதம் தமிழ்நாட்டில் உயர்ந்து வருகிறது!**

தொழில் துறையைப் பொறுத்தவரையில், இந்திய அளவிலான கவனத்தை மட்டுமல்ல உலக அளவிலான கவனத்தையும் தமிழ்நாடு பெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டு காலத்தில் ஏராளமான தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு வந்து கொண்டு இருப்பதே இதற்கு சான்றாகும்.

தமிழ்நாட்டில் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் நாட்டின் சராசரியை விட மிக அதிகமாக உள்ளதோடு, திறன் மிக்க பணியாளர்களையும் தமிழகம் பெற்றுள்ளது பல வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு முக்கியக் காரணமாக அமைந்திருக்கிறது. மேலும், தமிழ்நாடு அதிக முதலீடுகளை தொடர்ந்து ஈர்க்கின்ற வகையில், உலகத்தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்களையும் அமைத்து வருகிறது.

2030ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றிட வேண்டும் என்று உயரிய இலக்கை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்து, அந்த இலக்கை அடைவதற்கான அனைத்து முன்னெடுப்புகளையும் மேற்கொண்டு வருகிறார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 11.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் 500 கோடி ரூபாய் முதலீட்டில், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அந்நிறுவனத்தின் தற்போதுள்ள கட்டுமான கருவிகள் உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, கேட்டர்பில்லர் நிறுவனத்தின் இயக்குநர் புவன் அனந்தகிருஷ்ணன், முதுநிலை துணைத் தலைவர் கெர்க் எப்லர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**உலகின் 16 முன்னணி நிறுவனங்களுடன் ரூ.7016 கோடி முதலீட்டிற்கான ஒப்பந்தம்!**

அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார். இப்பயணத்தின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோவில் உலகின் 16 முன்னணி நிறுவனங்களுடன் 7016 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

> **“ தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார். இப்பயணத்தின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அமெரிக்க நாட்டின் சான் பிரான் சிஸ்கோ மற்றும் சிகாகோவில் உலகின் 16 முன்னணி நிறுவனங்களுடன் 7016 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ”**

அதன் தொடர்ச்சியாக 11.9.2024 அன்று சிகாகோவில், கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம்:

**கேட்டர்பில்லர் நிறுவனம் (Caterpillar Inc.,)**

கேட்டர்பில்லர் நிறுவனம், கட்டுமானம் மற்றும் சுரங்க கருவிகள், ஆஃப்ஹைவே டீசல் மற்றும் இயற்கை எரிவாயு இயந்திரங்கள், தொழில்துறை எரிவாயு விசையாழிகள் மற்றும் டீசல்எலக்ட்ரிக் இன்ஜின்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் உலகின் முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

இந்நிறுவனம் கட்டுமானத் தொழில்கள், வளத் தொழில்கள், எரிசக்தி மற்றும் போக்குவரத்து, நிதி தயாரிப்பு பொருட்கள் ஆகிய நான்கு வணிகப் பிரிவுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கேட்டர்பில்லர் நிறுவனம் டிராக்டர்கள் முதல் ஹைட்ராலிக் அகழ்வாராய்ச்சிகள், பேக்ஹோ ஏற்றிகள், மோட்டார் கிரேடர்கள், ஆஃப்ஹைவே டிரக்குகள், வீல் லோடர்கள், விவசாய டிராக்டர்கள் மற்றும் என்ஜின்கள் ஆகியவற்றின் இயந்திரங்களை தயாரித்து வருகின்றன. இந்த இயந்திரங்கள் கட்டுமானம், சாலை அமைத்தல், சுரங்கம், வனவியல், எரிசக்தி, போக்குவரத்து மற்றும் பொருட்களை கையாளும் தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றன. இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின் டெக்சாஸில் உள்ள இர்விங்கில் அமைந்துள்ளது.

**கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கேட்டர்பில்லர் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 500 கோடி ரூபாய் முதலீட்டில், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தற்போதுள்ள கட்டுமான கருவிகள் உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், கேட்டர்பில்லர் நிறுவனத்தின் இயக்குநர் புவன் அனந்தகிருஷ்ணன், முதுநிலை துணைத் தலைவர் கெர்க் எப்லர் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### நிதிப் பங்கீட்டில் ஒன்றிய அரசு பாரபட்சம்! விவாதிக்க

# தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநில முதல்வர்களுக்கு கடிதம் !

## கர்நாடக முதல்வர் சித்தராமையா அனுப்பினார்!

*பெங்களூரு, செப்.13-*

*நிதிப் பங்கீட்டில் ஒன்றிய பா.ஜ.க., அரசு காட்டும் கடுமையான பாரபட்சம் குறித்து விவாதிக்க வருமாறு பல்வேறு மாநில முதலமைச்சர்களுக்கு அழைப்பு கடிதம் மூலம் அழைப்பு விடுத்தார் கர்நாடகா முதலமைச்சர் சித்தராமையா.*

*நிதி பங்கீட்டில் ஒன்றிய அரசு காட்டும் பாரபட்சம் குறித்து விவாதிக்க வருமாறு, ஒன்றிய அரசுக்கு அதிக வரி செலுத்தும் மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா அழைப்பு விடுத்துள்ளார்.*

*அதிக வரி செலுத்தும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு குறைந்த நிதியையும், குறைந்த வரி செலுத்தும் பா.ஜ.க., மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதியையும் ஒன்றிய பா.ஜ.க., அரசு ஒதுக்கி வருகிறது. இதற்கு, அதிக வரி செலுத்தும் மாநிலங்கள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. தமிழ்நாடு அரசு கடும் கண்டனத்தை பதிவு செய்து வருகிறது.*

*இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் உள்ளிட்ட ஒன்றிய அரசுக்கு அதிக வரி செலுத்தும் பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு கர்நாடகா முதலமைச்சர் சித்தராமையா கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், நிதி பங்கீட்டில் ஒன்றிய அரசு காட்டும் பாரபட்சம் குறித்து விவாதிப்ப தற்காக பெங்களூருவில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.*

---

## ஜி.எஸ்.டி. குறித்து தொழில்துறையினர் சரமாரி கேள்வி!

### பதிலளிக்க முடியாமல் திணறிய ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன்!

*கோவை, செப்.13-*

*கோவையில் ஜி.எஸ்.டி. குறித்து தொழில்துறையினர் எழுப்பிய கேள்விகளுக்கு உரிய பதிலளிக்க முடியாமல் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திணறினார். இது குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.*

*கோவை கொடிசியா வளாகத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சிறு, குறு தொழில் முனைவோர், விவசாயிகள், வணிகர்கள் ஆகியோருடன் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துரையாடினார். இதில் கோவை தெற்கு தொகுதி எம்.எல்.ஏ வானதி சீனிவாசனும் பங்கேற்றார். அப்போது, பல்வேறு தொழில்துறையினர், ஜிஎஸ்டி வரி குறித்து தங்களது கருத்துகளை முன்வைத்தனர். அப்போது தனியார் உணவகத்தின் நிர்வாக இயக்குநர் ஒருவர், ஸ்வீட், கார வகை உணவுப் பண்டங்களுக்கு வெவ்வேறு ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுவதால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து நிர்மலா சீதாராமனிடம் எடுத்துரைத்தார். இவரது கேள்விக்கு உரிய பதிலளிக்க முடியாமல் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திணறினார்.*